# பனை அபிவிருத்திச் சபை



# வருடாந்த அறிக்கை - 2017

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம்
மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

**உள்ளடக்கம்** **பக்க இல.**


| | | |
|---|---|---|
| **(அ)** | **தோற்றப்பாடு செயற்பாடு** | **02 – 06** |
| | * எமது துாரநோக்கு மற்றும் எமது குறிக்கோள் | 02 |
| | * தலைவரின் அறிக்கை | 03 |
| | * தலைவரும் சபைப் பணிப்பாளர்களும் | 04 |
| | * கணக்காய்வு முகாமைக்குழு | 04 |
| | * நிறைவேற்று முகாமைத்துவம் | 04 |
| | * கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள் | 05 |
| | * எமது நோக்கங்களும் இலக்குகளும் | 06 |
| | * பனைவளம் | 06 |
| **(ஆ)** | **முகாமைத்துவத்தின் தந்திரோபாயங்களினூடாக முன்னேற்றத்தை பரிசீலனை செய்தல்** | **06 – 17** |
| | * வியாபாரம் முன்னேற்றம் தொடர்பான அறிக்கை | 06 – 15 |
| | * செயற்பாட்டுப் பெறுபேறுகளின் மீளாய்வு | 15 |
| | * நிதியியல் மீளாய்வு | 16 |
| | * ஆபத்து முகாமைத்துவம் | 16 |
| | * உத்திகள் | 17 |
| | * மனித மூலதனம் | 17 |
| | * சூழலியல் அறிக்கை | 17 |
| **(இ)** | **நிறுவன ஆளுகை** | **18 – 19** |
| | * நிறுவன ஆளுகை | 18 |
| | * பணிப்பாளர் சபைக்கூட்டங்கள் | 18 |
| | * கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு | 18 |
| | * கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அறிக்கை | 18 |
| | * உள்ளகக் கட்டுப்பாடு | 18 |
| | * முகாமைத்துவம் | 18 |
| | * பிறவிடயங்கள் | 19 |
| **(ஈ)** | **பணிப்பாளரின் அறிக்கை** | **19 – 21** |
| | * பொது | 19 |
| | * எதிர்கால அபிவிருத்திகள் | 19 |
| | * மைல்கல் நிகழ்வுகள் | 20 – 21 |
| **(உ)** | **நிதியியற் கூற்றுக்கள் – வெளிப்படுத்தல்கள்** | **22 – 44** |
| | * பொது கணக்கு கொள்கைகள் | 22 – 24 |
| | * ஐந்தொகை | 25 |
| | * நிதி நிலவர மாற்றங்களின் கூற்று | 26 |
| | * நிதிச் முன்னேற்றக் கூற்று | 27– 27 (2) |
| | * வழங்கல் மாற்றங்களின் கூற்று | 28 |
| | * நிதி நிலவர மாற்றங்களின் கூற்று | 29 |
| | * பாதீட்டு ஒப்பிடுகை கூற்று | 30 |
| | * கணக்குகளின் குறிப்புகள் | 31–44 |
| **(ஊ)** | **கணக்காய்வாளரின் அறிக்கை** | **45 – 59** |

## பனை அபிவிருத்திச் சபை

பனை அபிவிருத்திச் சபையானது 1971ம் ஆண்டின் 46ம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத் திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்ட 1975ம் ஆண்டின் 24ம் இலக்க சட்டத்தின் பிரகாரம் 18ம் திகதி ஆவணி மாத 1978ம் ஆண்டின் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மேலதிக தோட்டப் பயிர்ச் செய்கை அமைச்சின் கீழ் பனைசார் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கென உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். 2010ம் ஆண்டின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்றது. அதன் பின்னர் 2015 ஜனவரி 08ம் திகதியிலிருந்து சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின்கீழ் மிகவும் சிறப்பாக தொழிற்பட்டு வருகின்றது.

பனை அபிவிருத்தி சபையின் பிரதான செயற்பாடுகளாக மாதிரிப் பண்ணைகளில் பனை நடுகை கைத்தொழிலை ஒழுங்கமைத்தல், நவீனமயமாக்கல் மற்றும் விரிவாக்கம் செய்தல், கைவினைசார் தொழில் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல், பல்வேறு வகையான பனை உற்பத்திப் பொருட்களை உருவாக்கல், பனை உற்பத்திகளை மேம்படுத்தல், உணவு பொருள் உற்பத்திகள் மற்றும் பிற உற்பத்திகளை தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதுடன், கற்பகம் விற்பனை நிலையங்களை முறையாக பராமரித்து விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பனவாகும்.

# எமது தூரநோக்கு

வளங்களையும் சூழலையும் அழியாமல் அதே வேளையில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அர்த்தம் மிகுந்த பங்களிப்பை கொடுக்கும் பனைப் பிரிவை அபிவிருத்தி செய்வது.

# எமது குறிக்கோள்

பனைக் கைத்தொழிலையும் பனை வளங்களையும் ஒழுங்குபடுத்தி அபிவிருத்தி செய்தலும் முன்னேற்றுதலும்.

## தலைவரின் செய்தி

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் என்ற வகையில் இந் நூலுக்கான எனது கருத்துக்களை எழுதுவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதலாம் திகதி பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக நான் கடமையேற்று இன்று இரண்டாயிரத்துப் பதினேழாம் ஆண்டின் இறுதியில் இருக்கிறோம்.

நல்லாட்சி அரசாங்கத்தின் பெயரை நிலைநாட்டவும் பனை அபிவிருத்திச் சபையினை முன்னேற்றமடையச் செய்யவும் என எடுத்துக்கொள்ளப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாக நிர்வாக மற்றும் நிதி விதிகளும் ஏனைய அரச சுற்றறிக்கைகளும் மிக கவனமாக பின்பற்றப்பட்டு வருகின்றதுடன் இரண்டாயிரத்துப் பதினேழாம் ஆண்டு பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. உள்ளகக்கட்டுப்பாடு வலுப்படுத்தப்பட்டுள்ளது.
2. நிதிப்பகுதி வலுப்படுத்தப்பட்டுள்ளது.
3. உற்பத்தி விளைவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.
4. பனை சார் சந்தைப்படுத்தல் குறிப்பிடப்படக்கூடிய வளர்ச்சியை காட்டியுள்ளது.
5. பனை அபிவிருத்திச் சபையின் பயிற்சியாளர்களால் பனை உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது.
6. மனிதவளம் வலுவூட்டப்பட்டுள்ளது.
7. சர்வதேச ரீதியில் தொடர்புகள் மேற்கோள்ளப்பட்டு செயற்பாடுகள் தொடங்கப்பட்டுள்ளது
8. பனை உற்பத்திப் பொருட்கள் சர்வதேச சந்தைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.
9. பனை சார் ஆராய்ச்சிகள் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

இந்த வளர்ச்சியானது சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் கௌரவ அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அவர்களின் சிறந்த வழிகாட்டலும் உதவியும் இன்றி இலகுவில் அடைந்திருக்கப்பட முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், கடந்த காலத்தில் எமது பணியாளர்கள் மற்றும் பணிநிலை உத்தியோகத்தர்களின் ஈடுபாடும் சேவையும் பாராட்டப்படக்கூடியதாகவும் உள்ளது. எனவே, பனை அபிவிருத்திச் சபையினை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்வதில் பங்களிப்புச் செய்த அனைவரிற்கும் நன்றி சொல்ல வேண்டிய கடமை எனக்குள்ளது. அந்த வகையில் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பனை அபிவிருத்திச் சபையானது அரசாங்கத்தினதும் ஏனைய பங்குதாரர்களினதும் நலன்விரும்பிகளினதும் ஒத்துழைப்புடனும் வழிகாட்டலுடனும் இனிவரும் காலங்களில் மேலும் உயரங்களை அடையும் என்பதில் எனக்கு மட்டற்ற நம்பிக்கை உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வைத்திய கலாநிதி. இ. சிவசங்கர்**
தலைவர்
பனை அபிவிருத்திச் சபை

## தலைவரும் சபைப் பணிப்பாளர்களும் – 2017

1. திரு. ஆர். சிவசங்கர் – தலைவர்
2. திருமதி. எம்.புவிராஜ் (திறைசேரி) – பணிப்பாளர்
3. திரு. வி.பிறேமச்சந்திரன் – பணிப்பாளர்
4. திரு. ஈ.அன்னலிங்கம் – பணிப்பாளர்
5. திரு. வி.பாலச்சந்திரன் – பணிப்பாளர்

## கணக்காய்வு முகாமைத்துவம்

1. திரு. ஈ.அன்னலிங்கம் – தலைவர்
2. திரு. வி.பிறேமச்சந்திரன் – பணிப்பாளர்
3. திரு. எம்.புவிறாஜ் (திறைசேரி) – பணிப்பாளர்

## நிறைவேற்று முகாமைத்துவம்

| பதவி | பெயர் | தொ.பேசி | மின்னஞ்சல் |
|---|---|---|---|
| பொது முகாமையாளர் (கடமை நிறைவேற்றம்) | திரு.பி.சுதாகரன் | 0773787380 | sbsuthaharan@yahoo.com |
| பிரதிப் பொது முகாமையாளர் | திரு.எம்.பி.லோகநாதன் | 0777176322 | mblogan_cro@yahoo.com |
| முகாமையாளர் (நிதி) | திரு.வி.பி.தேவராசா | 0777299386 | vptheva@yahoo.com |
| முகாமையாளர் (விரிவாக்கல்) | திரு.கா.கோபாலகிருஸ்ணன் | 0773620584 | gkrishnan810@gmail.com |
| முகாமையாளர் (பயன்நோக்கு ஆராய்ச்சி) | திருமதி.எஸ்.ஜனார்த்தனன் | 0779966601 | sumithira79@yahoo.com |
| முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) | திரு.ஜி.கே.வாஹலதந்திரி | 0712185399 | geethkw2009@yahoo.com |
| முகாமையாளர் (நிர்வாகம்) | திரு.பி.சுதாகரன் | 0766688337 | sbsuthaharan@yahoo.com |
| முகாமையாளர் (அபிவிருத்தி) | திரு.எஸ்.ஸ்ரீவிஜேந்திரன் | 0773787380 | srthyln@yahoo.com |
| உள்ளகக் கணக்காய்வாளர் | திரு.ஆர்.இராமேஸ்வரன் | 0777317136 | ramanahmba@yahoo.com |
| முகாமையாளர் (உற்பத்தி) | திரு.ஆர்.ரஜிபரன் | 0778800660 | rajeev800@yahoo.com |

## கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | பனை அபிவிருத்திச் சபை. |
| **சட்ட அந்தஸ்து** | : | 1971ம் ஆண்டின் 46ம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத் திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்ட 1975ம் ஆண்டின் 24ம் இலக்க சட்டத்தின் பிரகாரம். |
| **ஆரம்பம்** | : | 1978 |

| **பதிவு செய்யப்பட்ட அலுவலகம்** | : | **விலாசம்** | **தொ.பேசி/ நகல்** |
|---|---|---|---|
| தலைமை அலுவலகம்: | | தேசிய வீடமைப்புச் செயலகம்<br>கண்டி வீதி, யாழ்ப்பாணம். | 0212222034<br>0212224154 |
| நகர அலுவலகம் | : | 356பீ, காலி வீதி, கொழும்பு03. | 0112574416 |

**பிராந்திய அலுவலகங்கள்**

| | | | |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | : | பார் வீதி, மட்டக்களப்பு | 0652223179 |
| திருகோணமலை | : | உட்துறைமுக வீதி, திருகோணமலை. | 0262224039 |
| அம்பாறை | : | இல: 20, தே.வீ.செ.கட்டிடம் கல்முனை. | 0672220405 |
| புத்தளம் | : | பஸ் நிலையம் அருகாமை, கல்பிட்டி. | 0322260749 |
| மன்னார் | : | சாந்திபுரம், மன்னார். | 0232222373 |
| வவுனியா | : | இல: 67-68, பசார் வீதி, வவுனியா. | 0242222483 |
| முல்லைத்தீவு | : | ஏ9 வீதி, மாங்குளம், முல்லைத்தீவு. | 0212060042 |
| கிளிநொச்சி | : | கண்டி வீதி, கிளிநொச்சி | 021-2285638 |
| அம்பாந்தோட்டை | : | வெல்லவாய வீதி, வீரவில. | 0473221201 |

| | | |
|---|---|---|
| **மின்னஞ்சல்** | : | slpalmyrah@gmail.com மற்றும் slpdbho@yahoo.com |
| **இணையத்தளம்** | : | www.pdb.gov.lk |
| **கணக்காய்வாளர்** | : | தலைமை அதிபதி,<br>கணக்காய்வாளர் திணைக்களம். |
| **சட்ட ஆலோசகர்** | : | சட்டமா அதிபர்<br>சட்டத் திணைக்களம். |
| **வங்கி** | : | இலங்கை வங்கி |

## எமது நோக்கங்களும் இலக்குகளும்

சபையின் இலக்குகளும் நோக்கங்களும் பின்வருமாறு:-

- பனையை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி மற்றும் சமூக மேம்பாட்டிற்கு உதவத்தக்க நிறுவன ரீதியான அடித்தளத்தை வழங்குதல்.
- இலங்கையில் பனையை அடிப்படையாகக் கொண்ட தொழில் துறையின் நிலையான அபிவிருத்திக்கு நுண்ணிய, மத்தியதர, உயர்தொழில்நுட்ப மட்டங்களில் விஞ்ஞான ரீதியான சிறந்த அடித்தளத்தை ஏற்படுத்துதல்.
- அடிப்படை உத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப அபிவிருத்திக்கு வழிகாட்டத்தக்க பிரயோக ஆய்வுகள் மூலமாக பனைப்பயிரின் பாதுகாப்பு, பேணுகை,உற்பத்தி, அபிவிருத்தி என்பனவற்றுக்கான தொழில்நுட்பமுறைகளை அபிவிருத்தி செய்தல்.
- ஒன்றிணைந்த அபிவிருத்தி முயற்சிகளை நோக்கமாகக் கொண்டு பனை மற்றும் கால்நடை அபிவிருத்தி என்பனவற்றினை மேம்படுத்தல்.
- பனை அபிவிருத்திச் சபையின் மூலம் உருவாக்கப்படும் தொழில்நுட்பமுறைகளை இத்துறைசார்ந்து தங்கியிருப்போருக்கும் தொழிலதிபர்களுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் வண்ணம் இடம் மாற்றுதல்.
- பனை உற்பத்திக்குரிய வளங்களின் தேசிய களஞ்சியமாகச் செயற்படுதலும், பயிரிட உதவும் உபகரணங்களை சிறந்த முறையில் தயாரித்தலும்.
- பனை தொடர்பான தொழில்நுட்பத் தகவல்களை நடைமுறைப்பிரயோகங்களுக்கேற்ப பிரசித்தி பெற்ற விளக்கங்களோடு ஒப்பிடுதலும் பரப்புதலும்.
- பனையுடன் தொடர்பான நிறுவனரீதியான அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றின் ஊடாக உற்பத்தி முறைகளின் முகாமைத்துவத்தில் பல்வேறு தெரிவுகளை மேம்படுத்தலும் கிடைக்கச் செய்தலும்.

## பனைவளம்

பனைமரமானது அரக்கேசியா (Arecaceae) எனும் தாவரக்குடும்பத்திலுள்ள பொராசஸ் (Borassus) என்னும் தாவர இனத்தை சார்ந்ததாகும். பனைமரமானது தெற்கு ஆபிரிக்கா, தென்கிழக்கு ஆசியா, இந்தோனேசியாவின் வடக்குப் பகுதி போன்ற இடங்களிலும் பரவிக் காணப்படுகின்றது.

இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் காணப்படுகின்ற பனைமரங்களின் எண்ணிக்கைகள் முறையே மில்லியனில் 80,11,10 மற்றும் 02 ஆகும்.

இலங்கையில் பனை மரத்தின் பரம்பல் விபரம்:

| மாவட்டம் | பனை மரங்கள் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 3,500.000 |
| கிளிநொச்சி | 3,500,000 |
| மன்னார் | 3,000,000 |
| முல்லைத்தீவு | 500,000 |
| திருகோணமலை | 210,000 |
| மட்டக்களப்பு | 200,000 |
| புத்தளம் | 120,000 |
| அம்பாறை | 40,000 |
| அனுராதபுரம் | 40,000 |
| வவுனியா | 8,000 |
| அம்பாந்தோட்டை | 2,000 |
| **மொத்தம்** | **11,120,000** |

## பனைசார் உற்பத்திகளின் விபரம்

| |
|---|
| **பனஞ்சாற்று அடிப்படையிலான உற்பத்தி** |
| i)நொதிப்படையாதவை: பனைவெல்லம்,பனம்பாணி,பதனீர்,கல்லாக்காரம் |
| ii)அற்ககோல் உற்பத்திகள் : சாராயம், போத்தலில் அடைக்கப்பட்ட கள், |
| iii)நொதிப்படைந்த உற்பத்திகள்: வினாகிரி |
| **பனங்களி அடிப்படையிலான உற்பத்திகள்:** |
| போத்தலில் அடைக்கப்பட்ட பனங்களி, பனாட்டு, பாணிப்பனாட்டு, ஜாம், கோடியல், உடனடிப்பானம், பனம் பலகாரம், பனம் கேக், பனம் குளுக்கோரச, பனம் மாஸ்மெலோ, பனம் ஐஸ்கிரீம், பனம் யோகட் மற்றும் ஏனைய மருத்துவ அடிப்படையிலான உற்பத்திகள். |
| **கிழங்கு அடிப்படையிலான உற்பத்திகள்:** |
| கிழங்கு, பச்சை ஒடியல், ஒடியல்மா, புளுக்கொடியல்மா, பாம்போசா, பனம் பிஸ்கட் |
| **பனை ஓலையினாலான உற்பத்திகள்:** |
| பாரம்பரிய கைப்பணிகள்:- நாரினால் பின்னப்பட்ட கூடை, பின்னல் கதிரை, கஜூ பொதிசெய்யும் பெட்டி, தேயிலைப் பெட்டி, தொப்பிகள், பாய்கள், ஈர்க்கில் உற்பத்திகள், தும்பு உற்பத்தி, பல் துப்பரவு செய்யும் குச்சி, பூப்பானைகள், சுவர்மாட்டிகள், தும்பு கழிவுகள் மூலம் பூங்கன்றுகள் வளர்க்கும் பொருள், மண்சாடிகள் |
| **தும்பு அடிப்படையிலான பொருட்கள்:** |
| வைரத்தும்பு- தும்பு பிறஸ், நடுத்தர தும்பு- வீட்டுப்பொருட்கள் துப்பரவு செய்யும் பிறஸ் |
| **மரத்தாலான உற்பத்திகள்:** |
| கட்டடக்கூரைகள் உருவாக்கல், வீட்டுத்தளபாடங்கள் உருவாக்கல், சிப்போட், விறகுப்பயன்பாடு |

பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டு நாட்டின் ஏனைய பகுதிகளில் ஒன்பது பிராந்திய நிலையங்களையும், பதினைந்து கற்பக விற்பனை நிலையங்களையும் பதின்னிரண்டு உற்பத்தி நிலையங்களையும், ஒரு ஆராய்ச்சி நிலையம், ஒரு பனை வடிசாலை அத்துடன் 11 மாதிரிப் பண்ணைகளும் நிர்வகிக்கப்படுகின்றன. அவற்றின் விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## ஆ. முகாமைத்துவத்தின் தந்திரோபாயங்களினூடாக முன்னேற்றத்தை பரிசீலனை செய்தல்

## வியாபார முன்னேற்றம் தொடர்பான அறிக்கை

## ஆ. 1. பனம் விதை நடுகை செயற்பாடுகள்

பனை நடுகைக்குரிய மூலப்பொருட்கள் அடிப்படையிலான உணவு மற்றும் விநியோகத்தர்கள் மூலமாகவும் சுற்றாடலில் கிடைக்கக்கூடியதாக உள்ளது.

பனை அபிவிருத்திச் சபையானது ஒரு அரச நிறுவனமாக இருந்து கொண்டு பனை தொடர்பான கைத்தொழிலையும் பனைநடுகையையும் ஏற்கனவேயுள்ள பனை மரங்களை பாதுகாத்தல் நடவடிக்கையும் மேற்கொண்டுள்ளது. வருடாவருடம் அக்டோபர் மாதத்திலிருந்து டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் பனை நடுகைத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இப்பனம் விதைநடுகைத் திட்டம் இலங்கை பூராவும் பிரதேச செயலகங்கள் மாவட்டச் செயலகங்கள் உள்ளூர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. நடுகை செய்யப்படும் இடங்கள் பிரதானமாக அரசகாணிகள் வீட்டுக்காணிகள் அரசகாணிகளின் பகுதியாகும். மேலும் பனை தறித்தல் தொடர்பான கட்டுப்பாடுகளை சபை வருடா வருடம் மேற்கொள்ளப்படுகின்றது.

## ஆ. 2. அபிவிருத்திப்பகுதி

1. பனை மரங்களின் தொகையை அளவீடு செய்தல் (ஜிபிஎஸ் முறை) தற்போதய தரவும் மற்றும் ஏற்கனவேயுள்ள பனைவளம் தொடர்பான போதிய தகவல்கள் கிடைக்கவில்லை. இது சபையின் திட்டமிடலில் பெரும் சவாலாக உள்ளது. இதற்காக யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் உதவியுடன் ஜிபிஆர்எஸ் அளவை திட்டமிடப்பட்டது.
2. 150000 பனம்விதை நடுகைத்திட்டம் வெவ்வேறு நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.





3. மாதிரிப்பண்ணைகளை தரமுயர்த்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
   - யானைக்கு எதிரான மின்சார வேலியமைத்தல்.
   - வீரவிலப் பண்ணையில் ஊடுபயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.
   - ஊழியர்களுக்கு ஊடுபயிர்ச் செய்கை தொடர்பான பயிற்சி வழங்கப்படுகின்றது.

## ஆ. 3. மாதிரிப் பனம் பண்ணைகள்

பனை மாதிரிப்பண்ணைகளில் பனை செய்கை மேற்கொள்ளப்படுகின்றபோது பொருத்தமான ஊடுபயிர்கள் நடுகை செய்யப்படுகின்றது. இப்பண்ணைகளானது பொதுமக்கள் தங்களின் சொந்தக்காணிகளில் பனையை நடுகை செய்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துபவையாகவும் தெளிவுபடுத்துபவையாகவும் காணப்படுகின்றது. எனவே இளம் பனைகள் வருமானத்தை தரமுடியாதவை என நாம் எதிர்பார்க்கமுடியாது. ஆனால் இதை முறையாக பராமரித்தால் எதிர்காலத்தில் சிறந்த பயன்களைப் பெறலாம்.

தற்போது மாதிரிப்பண்ணைகளில் பனம்பாத்தியிடல், பனங்கன்றுகள் உருவாக்கல் மற்றும் ஊடுபயிர்ச்செய்கை ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன.

**2017ம் வருடத்தில் பனை அபிவிருத்திச் சபையால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற மாதிரிப்பண்ணைகள் விபரங்கள்:**

| இல. | மாவட்டம் | இடமும் பரப்பளவும் | பிரதான பயிர்கள் |
|---|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | மாமுனை<br>நெடுந்தீவு<br>குடத்தனை | வடலிகள் அன்னாசி<br>வடலிகள்<br>வடலிகள் |
| 02 | வவுனியா | புளியங்குளம் | வடலிகள் பழமரக்கன்றுகள் |
| 03 | கிளிநொச்சி | ஊற்றுப்புலம்<br>கௌதாரிமுனை<br>முழங்காவில் | வடலிகள்<br>வடலிகள்<br>வடலிகள் |
| 04 | அம்பாந்தோட்டை | வீரவில | வடலிகள்<br>வாழை<br>எள்ளு |

***பகுதி அபிவிருத்தி***

1. பனை வளம் ஒரு நீண்டகால முதலீட்டுக்குரியதுடன் அதில் நேரடியாக தங்கியிருக்கின்ற குடும்பங்களுக்கு சிறந்த வாழ்வாதாரமாக உள்ளது.
2. மேலதிகமாக நடுகை செய்யப்படுகின்ற பனை முழுச் சமுகத்திற்கும் இயற்கைச்சமநிலை மற்றும் சூழல் பாதுகாப்பை தருகின்றது.
3. பனை உயிரியல் வேலைத்திட்டம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது எல்லைப்புற கிராமங்களில் யானையினால் ஏற்படுகின்ற பாதிப்புகளைத் தடுக்கன்றது.
4. எல்லைப்புற காணிகளில் பனம்விதை நடுகை ஊக்குவிக்கப்படுகின்றது.
5. களவாக பனை தறிப்பதை தடுக்க பிரதேச செயலகங்கள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது
6. முதிர்ச்சியடைந்த பனைமரம் வீட்டுக்கூரைக்கு மிகவும் பயனுள்ளது.வடகிழக்கு மாகாணத்தின் தேவையைப்பூர்த்தி செய்ய 80வீதத்திற்கு மேலான மரம் தேவையாகும். பிரதேச செயலகங்களின் கணக்கீட்டின்படி வருடாந்தம் 20000 முதிர்ச்சியடைந்த பனைமரங்கள் வெட்டப்படுகின்றன. இத்தரவின்படி வருடாந்தம் கிட்டத்தட்ட 140மில்லியன் ரூபா ஜிடிபிக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

## விரிவாக்கம்

பனை அபிவிருத்தி சபையானது தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்வுகளிலும் உள்வாங்கியுள்ளது. இந்த செயற்பாடு வறிய கிராம மக்கள் மற்றும் பெண் குழுவினர்களாக திறன் விருத்தி தொழில் கல்வி பயிற்சி செயற்பாடுகளுக்கூடாக வசதியளிக்கப்பட்டுள்ளது.

பனை ஓலை கைவேலை பயிற்சியே எமது பகுதி மூலம் பிரதானமாக வழங்கப்படுகின்றது எனினும் எமது உற்பத்திப்பகுதி மற்றும்ஆராய்ட்சி பகுதியின் அனுசரனையோடு பனம்கழி பனம்சாறு மற்றும் தும்பு பயிற்சி எம்மால் வழங்கப்படுகின்றது

**பனை ஓலை கைவேலை பயிற்சி:**

சபையினுடைய நன்கு பயிற்றப்பட்ட 48 கைவேலை ஆசிரியர்களினால் கைவேலை பயிற்சிகள் நடாத்தப்படுகின்றன. வேலையற்ற வறிய கிராம மக்கள், பாடசாலையில் இருந்து இடைவிலகியவர்கள் மற்றும் ஆதரவற்ற வளர்ந்த பெண்களுக்கு சுயதொழிலில் ஈடுப பயிற்சிகளை கொடுப்பதற்கு வெவ்வேறு கிராமத்திற்கு அனுப்பப்பட்டார்கள். இந்த பயிற்சிகள் சபையினுடைய மாவட்ட முகாமையாளர்களால் ஒழுங்கமைத்து மேற்பார்வை செய்யப்பட்டது. பயிற்சிகள் வெற்றிகரமாக நிறைவு செய்த பின் இப்பயிற்சிகளை பெற்றவர்கள் பனை அபிவிருத்தி சபையின் உற்பத்தி குழுவுடன் இணைக்கப்பட்டு "சிறுசுவடுகள்" என அழைக்கப்பட்டார்கள். சிறிது காலத்தின் பின் சந்தை உற்பத்தி சார்ந்த துறையில் ஈடுபடுத்துவதற்கு அவர்களுக்கு உதவப்பட்டது. இதனால் அவர்களுடைய தரமான உற்பத்திகள் கற்பகம் விற்பனை நிலையம் ஊடாக சந்தைப்படுத்தப்படுகின்றன.

**செயல்பாடு :** பனை அடிப்படையிலான கைவேலை பயிற்சியினை விரிவாக்கல் பகுதியினூடாக வழங்குதல்.

**குறிக்கோள் :** பனை அடிப்படையிலான சுயவேலை வாய்ப்பு.

**பயிற்சி திட்டங்கள் 2017**

| பயிற்சிகள் | பயனாளிகள் |
|---|---|
| பனையோலை கைவேலை பயிற்சி | 872 |
| பனையோலை கைவேலை உற்பத்தியாளர்கள் | 1237 |
| பனம்களிப் பயிற்சி | 100 |
| நார் பயிற்சி | 30 |
| பனம்சாறு பயிற்சி | 15 |


**பனை ஓலை கைவேலை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் – 2017**

| இல | மாவட்டம் | பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை | உபகரணங்கள் வழங்கப்பட்ட உற்பத்தியாளர்களி ன் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 05 | 87 | 82 | 54 |
| 2 | கிளிநொச்சி | 03 | 51 | 51 | 46 |
| 3 | முல்லைத்தீவு | 02 | 63 | 312 | 30 |
| 4 | வவுனியா | 02 | 50 | 49 | 28 |
| 5 | மன்னார் | 03 | 39 | 42 | 45 |
| 6 | புத்தளம் | 02 | 35 | 26 | 43 |
| 7 | திருகோணமலை | 04 | 117 | 51 | 40 |
| 8 | மட்டக்களப்பு | 10 | 221 | 581 | 73 |
| 9 | அம்பாறை | 05 | 107 | 43 | 40 |
| 10 | அம்பாந்தோட்டை | 02 | 38 | - | 05 |
| 11 | குருநாகல் | 01 | 24 | - | 05 |
| 12 | அனுராதபுரம் | 01 | 40 | - | 05 |
| | **மொத்தம்** | **40** | **872** | **1237** | **414** |

## நிர்வாகப்பிரிவு – 2017

### அ. நிர்வாகப் பிரிவின் செயல்பாடுகள்

1. **5S திட்டம்:** முறையான செயல்பாடுகளை பராமரிக்க செயற்படுத்தக்கூடிய முறையை ஒழுங்குபடுத்த 5S திட்டம் தொடங்கி ஊழியர் கட்கு பயிற்சி வழங்கப்பட்டது.
2. **கொள்முதல் திட்ட பயிற்சி**
   சகல ஊழியர்கட்கும் கொள்வனவு பற்றிய அறிவை வழங்குதல்.
3. கைதடி பனை ஆராய்ச்சி வழாகத்தில் பனைப்பொருள் உற்பத்தி பற்றிய பயிற்சி வழங்கக்கூடிய வகையிலான ஒருவருட டிப்ளோமா வழங்குவதற்காக நிலையம் ஒன்று அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது.
4. **கைதடி பனை ஆராய்ச்சி வழாகத்தில் மகாநாட்டு மண்டபம் அமைக்கப்பட்டது.**
   வதிவிடத்துடன் கூடிய பயிற்சி வழங்கப்பட்டது.
5. **ஆளுமை விருத்திக்கான சம்பந்தப்பட்ட இடங்களுக்கு விஜயம் செய்தல்.**
   ஆளுமை விருத்திக்கான பயிற்சிக்காக சகல ஊழியர்களையும் மட்டக்களப்பு திருகோனமலை ஆகிய இடங்களில் ஒன்று கூட்டி பயிற்சி வழங்கப்பட்டது.
6. **திட்டமிடல் பிரிவு நிறுவப்பட்டது.**
   திட்டமிடல் பிரிவு மூலதன மற்றும் வாழ்வாதார நிதி திட்டமிடலுக்காக நிறுவப்பட்டது.
7. **சிங்கள மொழிப் பயிற்சி**
   சிங்கள மொழிப்பயிற்சியானது ஊழியர் தொடர்பாடல் திறமையை விரிவுபடுத்துவதற்காக நிர்வாகப்பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டதுடன் 15 ஊழியர்கள் பயனடைந்துள்ளனர்.
8. **அடிப்படை கணனி பயிற்சித்திட்டம்.**
   பனை அபிவிருத்திச் சபை ஊழியர் கணனி தொழில் நுட்ப அறிவை உயர்த்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டது.
9. அத்துடன் ஸ்பாக்கிறிட் பிறைவேற் லிமிற்ரெட் உதவியுடன் சபையின் உத்தியோகபூர்வ இணையதளம் அபிவிருத்தி செய்து வழங்கப்பட்டது.




## ஆ) ஆளணிக் கட்டமைப்பு

| தொ. இல | ஊழியர் எண்ணிக்கை 31-12-2017 | அனுமதிக்கப்பட்டது | உள்ளது |
|---|---|---|---|
| | | இல | இல |
| 1 | நிறைவேற்றுத்தரம் | 28 | 25 |
| 2 | மேற்பார்யாளர் தொழில்துட்ப உத்தியோகத்தர் விற்பனை உதவியாளர் | 19 | 12 |
| 3 | எளுதுவினையர் மற்றும் அது தொடர்பாணது | 69 | 59 |
| 4 | திறன் மற்றும் பாதி திறன் தொழிலாளர் | 62 | 64 |
| 5 | சிற்ரூளியர் மற்றும் திறனற்ரோர் | 49 | 54 |
| | மொத்த ஊழியர்கள் | **227** | **214** |

## உற்பத்தி

பனை அபிவிருத்திச் சபையானது உண்ணக்கூடிய உணவுப்பொருளாகவும், உணவற்ற பொருளாகவும் பனைசார்ந்த உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்கிறது. உண்ணக்கூடிய பொருட்கள் பிரதானமாக பனம்பழத்திலிருந்து பெறப்படுகின்றது. மேலும் உணவற்ற பொருட்கள் மற்றும் குடிவகைகள் என்பனவும் உற்பத்தி செய்யப்படுகின்றது.

1. **உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தும் மையம் உருவாக்கப்பட்டது.**
   சுதந்திரமாக செயல்படக்கூடிய வகையிலும் உற்பத்திக்கும் சந்தைப்படுத்தலுக்கும் நல்ல அடித்தளத்தை அடைக்கும் வகையிலும் இது உருவாக்கப்பட்டது.
2. உற்பத்தி ஊழியர்கட்கு பொதியிடல் பயிற்சி ஒன்று ஸ்மெக் கம்பனியில் வழங்கப்பட்டது.
3. புதிய பொதியிடல் தொழில்நுட்பமானது பழரச பானத்திற்கு வழங்கப்பட்டது.
4. காரைநகர் தொழிற்சாலை இயக்கப்பட்டது.
5. உற்பத்தியாளர்கட்கு பயிற்சியளித்து சான்றிதள்னள் வழங்கப்பட்டது.
6. மூன்று மாவட்டங்களில் பனைவெல்ல இயந்திரம் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## உற்பத்தி அளவு:

| பனை சார் மற்றும் பனை சாராத உற்பத்திப் பொருட்கள் | | ஆண்டு | |
|---|---|---|---|
| | | 2017 | 2016 |
| **பதனீர் சார்ந்த உற்பத்திகள்** | | | |
| பனங்கட்டி உற்பத்தி | மொத்த உற்பத்தி கி.கிராம் | 10,595.90 | 9,608.5 |
| பனம்பாணி உற்பத்தி | மொத்த உற்பத்தி லீற்றரில் | 6,958.60 | 970.0 |
| கல்லாக்கார உற்பத்தி | மொத்த உற்பத்தி கி.கிராமில் | 69.50 | 32.0 |
| பதநீர் | மொத்த உற்பத்தி மில்லி லீற்றரில்(325) | | 4,438.0 |
| **பனம்பழம் மற்றும் பனங்களி அடிப்படையான உற்பத்திகள்** | | | |
| பனங்களி உற்பத்தி | மொத்த உற்பத்தி லீற்றரில் | 26,000.00 | 25,984.0 |
| பனங்களி உற்பத்தி | மொத்த உற்பத்தி (750 மி.லீ) | 6,155.00 | |
| மென்பான உற்பத்தி | போத்தல்களின் எண்ணிக்கை (190மி.லீ) | 18,795.00 | 12,296.0 |
| பனங்கிறஸ் உற்பத்தி | போத்தல்களின் எண்ணிக்கை(750மி.லீ) | 2,954 | 2,791.0 |
| ஜாம் உற்பத்தி | போத்தல்களின் எண்ணிக்கை (450கி) | 1,732 | 990.0 |
| பனாட்டு உற்பத்தி | மொத்த உற்பத்தி கி.கிராம் | 4,017 | 778.6 |
| பாணிப்பனாட்டு | மொத்த உற்பத்தி கி.கிராம் | 1,699 | 437.8 |
| ஓயில்க்கேக் உற்பத்தி | உற்பத்தி செய்யப்பட்ட எண்ணிக்கை(கி) | 952 | 1,200.0 |
| பனம் பலகார உற்பத்தி | உற்பத்தியான பைக்கற் எண்ணிக்கை | 42.98 | 7,404.0 |
| இனிப்பு உற்பத்திகள் | உற்பத்தி செய்யப்பட்ட எண்ணிக்கை | | 1,025.0 |
| **கிழங்கை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள்** | | | |
| பனங்கிழங்கு உற்பத்தி | மொத்த கொள்வனவு கி.கி | 2,240.00 | 1,890.0 |
| புழுக்கொடியல் உற்பத்தி | மொத்த கொள்வனவு கி.கி | 4,049.00 | 2,955.0 |
| சீவல் ஒடியல் உற்பத்தி | மொத்த கொள்வனவு கி.கி | 8,960.00 | 2,002.0 |
| வட்டச்சீவல் | மொத்த கொள்வனவு கி.கி | 649.50 | |
| புழுக்கொடியல் மா உற்பத்தி | மொத்த கொள்வனவு கி.கி | 1,859.50 | 1,619.0 |
| ஓடியல் கூழ் உற்பத்தி | மொத்த கொள்வனவு (150கி) | 2,455.00 | 1,619.0 |
| பாம்போசா உற்பத்தி | மொத்த கொள்வனவு(150கி) | 271 | 4,639.0 |
| ஓடியல்க்கூழ் உற்பத்தி | உற்பத்தி செய்யப்பட்ட எண்ணிக்கை | 4,960 | 727.5 |
| **தும்பை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள்** | | | |
| தும்பு உற்பத்தி | மொத்த உற்பத்தி கி.கி | | 2,155.0 |
| தும்புத்தடி | உற்பத்தி செய்யப்பட்ட எண்ணிக்கை | | 57.0 |
| **ஏனைய பனை சார் மற்றும் பனை சாராத உற்பத்திகள்** | | | |
| பனம் குக்கீஸ் | பக்கற்ஸ் | 1466.00 | |
| பனம் யோகட் | எண்ணிக்கை | 1300.00 | |
| பனம் ஐஸ்கிறீம் | எண்ணிக்கை | 200.00 | |
| பனங்கட்டி கேக் | எண்ணிக்கை | 79.00 | |
| பனம் மாஸ்மெலோ | எண்ணிக்கை | 2,013 | |
| பனம் ஜூஜூப்ஸ் | எண்ணிக்கை | 109 | |
| வடகம் | கிராம் 100 | 1893 | |
| வடகம் | கிராம் 250 | 706 | |
| தட்டுவடை | எண்ணிக்கை | 1128 | |
| ஓடியல் கூழ் | 500 மி.லீ | | 4,419.0 |
| உற்பத்தி பெறுமதி | (மில் ) | 19.14 | 11.90 |

பனை அபிவிருத்திச் சபையானது யாழ்பாணம், கொழும்பு, மன்னார், மட்டக்களப்பு, புத்தளம், திருகோணமலை ஆகிய இடங்களில் உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ளது.

உற்பத்தி நிலையங்களின் விபரம்:-

| மாவட்டம் | பனை வெல்ல உற்பத்தி நிலையம் | பனந்தும்பு உறபத்தி நிலையம் | பனங்களி உற்பத்தி நிலையம் | உணவும்மென்பான உற்பத்தி நிலையம் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | சிங்கைநகர் | சுரசாலை | சிங்கைநகர் | யாழ்ப்பாணம் சந்தைப்படுத்தும்பகுதி |
| மன்னார் | கட்டுக்காரன் குடியிருப்பு | செல்வாரி | படப்படி | |
| | தரவன்கோட்டை | ஓலைத்தொடுவாய் | | |
| | படப்படி | | | |
| திருகோணமலை | | | வரோதயநகர் | |
| மட்டக்களப்பு | | | முகத்துவாரம் | |
| கொழும்பு | | | | வெள்ளவத்தை |
| புத்தளம் | | கற்பிட்டி | கற்பிட்டி | |

## சந்தைப்படுத்தல்

பனை அபிவிருத்திச் சபையானது கற்பகம் விற்பனை நிலையத்தின் ஊடாக பனை அபிவிருத்திச் சபையின் சந்தைக்கடுத்தலை யாழ்பாணம், கொழும்பு, மன்னார், மட்டக்களப்பு, புத்தளம், திருகோணமலை, திஸ்ஸமஹாரகம ஆகிய இடங்களில் விற்பனை நிலையங்களைக் கொண்டுள்ளது.

**விற்பனை நிலையங்கள் (கற்பகங்கள்)**

| | | |
|---|---|---|
| 1. யாழ். மாவட்டம் | – | பருத்தித்துறை வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். |
| 2. யாழ். மாவட்டம் | – | காட்சியறை சந்தைப்படுத்தும் பகுதி, கண்டி வீதி, யாழ்ப்பாணம். |
| 3. யாழ். மாவட்டம் | – | இல. 129டி, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். |
| 4. யாழ். மாவட்டம் | – | ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 5. யாழ். மாவட்டம் | – | யாழ்ப்பாண பஸ் நிலையம், யாழ்ப்பாணம். |
| 6. கொழும்பு மாவட்டம் | – | டபிள்யூ ஏ சில்வா மாவத்தை, கொழும்பு 06. |
| 7. மன்னார் மாவட்டம் | – | மடு வீதி, மன்னார். |
| 8. மன்னார் மாவட்டம் | – | மன்னார் நகரம், மன்னார். |
| 9. மட்டக்களப்பு மாவட்டம் | – | 15, யுடிஎ கட்டிடம், மட்டக்களப்பு. |
| 10. மட்டக்களப்பு மாவட்டம் | – | காட்சியறை, வெளிச்சவீடு, மட்டக்களப்பு. |
| 11. திருகோணமலை மாவட்டம் | – | மின்சார நிலைய வீதி, திருகோணமலை. |
| 12. வவுனியா மாவட்டம் | – | 67/68 கடைவீதி, வவுனியா. |
| 13. அம்பாறை மாவட்டம் | – | 107 டீ, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 14. புத்தளம் மாவட்டம் | – | புதிய பஸ் நிலையம், கற்பிட்டி. |
| 15. அம்பாந்தோட்டை மாவட்டம் | – | புத்தவிகாரைக்கு முன்னால் திஸ்ஸமஹாரகம. |

## மொத்த விற்பனை கற்பக விற்பனை நிலையம் (2016–2017)

| கற்பகம் | 2017 | 2016 |
|---|---|---|
| யாழ்– நெடுந்தீவு | 142,108.00 | 483,037.20 |
| யாழ்– நல்லூர் | 3,684,590.55 | 2,726,268.00 |
| யாழ்– காட்சியறை | 2,011,387.30 | 2,222,698.45 |
| யாழ்–கே.கே.எஸ் வீதி | 3,103,651.45 | 2,657,012.75 |
| யாழ்– பஸ்நிலையம் | 1,482,943.15 | 1,258,034.00 |
| யாழ் – கற்பகச்சோலை | 939,881.05 | 0 |
| யாழ்– களஞ்சியம் | 1,523,195.50 | 1,889,384.05 |
| யாழ்– பி.சி | 355,380.00 | 730,841.00 |
| கொழும்பு –கற்பகம் | 7,388,009.15 | 6,317,531.36 |
| பொருட்காட்சி விற்பனை | 3,596,279.41 | 1,497,215.00 |
| நடமாடும் விற்பனை சேவை | 375,444.50 | 0 |
| வவுனியா | 7,035,297.00 | 3,733,591.00 |
| மட்டக்களப்பு–கற்பகம் | 798,364.05 | 654,968.25 |
| மட்டக்களப்பு– காட்சியறை | 465,899.25 | 1,977,869.25 |
| கல்முனை | 1,216,938.00 | 979,886.75 |
| மன்னார் | 4,134,040.35 | 2,551,705.25 |
| மன்னார் 2 | 111,345.00 | 0 |
| திருகோணமலை | 1,306,796.45 | 882,358.20 |
| திருகோணமலை– களஞ்சியம் | - | 54,590.00 |
| கற்பிட்டி கற்பகம் | 351,137.50 | 117,675.00 |
| கற்பகம் திச | 806,420.00 | 549,619.00 |
| முல்லைத்தீவு | 4,590.00 | 86,848.35 |
| வீரவில | 116,930.00 | 223,550.00 |
| **மொத்தம்** | **40,950,627.66** | **31,594,682.86** |

## ஆராய்ச்சியும் மற்றும் தரநிர்ணய பிரிவு

### பிரயோக ஆராய்ச்சியும் தரநிர்ணயப்பிரிவும்

1. ஆராய்ச்சி முகாமைத்துவகுழு உருவாக்கப்பட்டது.
   - ஆராய்ச்சி நடவடிக்கைக்கான ஒழுங்குபடுத்தல்.
   - ஆராய்ச்சி தொடர்பான செயற்பாடுகளின் ஏற்படும் பிழைகளை திருத்தம் செய்தல்.
   - கண்டுபிடிப்புக்களை வெளியிடுதல்.



*முதல் ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுக் கூட்டம்*

**ஆராய்ச்சி முகாமைத்துவக்குழு தலைவர்:**

பேராசிரியர்–வசந்தி அரசரட்ணம்–(மூத்த பேராசிரியர் மருத்துவபீடம் – பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்

**உறுப்பினர்கள்:**

1. பேராசிரியர் சு.மோகனதாஸ் – முன்னாள் உபவேந்தர் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்
2. பேராசிரியர் – G.மிகுந்தன் – பீடாதிபதி, பட்டப்படிப்புகள் பிரிவு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்
3. திரு. S. கோகுலதாசன், முன்னாள் தலைவர், ப.அ.ச
4. செல்வி. S. சங்கீதா – விரிவுரையாளர், பல்கலைக்கழக கல்லூரி, யாழ்ப்பாணம்
5. திரு. M.B. லோகநாதன் – உதவி பொதுமுகாமையாளர், ப.அ.ச
6. திருமத. எஸ்.ஜனார்த்தனன் – முகாமையாளர் ஆராய்ச்சி, ப.அ.ச
7. கலாநிதி. பி. அனுலக்சி –ஆராய்ச்சி உத்தியோகத்தர், ப.அ.ச

2. உணவு உற்பத்தியாளர்களுக்கான சான்றிதழை வழங்குவதற்கு ஆய்வுகூடத்தின் இரசாயன அளவுக்கு சர்வதேச அங்கீகாரம் 17025 பெற்றுக்கொள்ளப்பட்டது

3. முழுமையான ஆய்வுமுடிவுகளை பனைசார்ந்த சங்கங்கள் மற்றும் சிறிய நடுத்தர நிறுவனங்களுக்கு பயிற்சியளித்தல் மூலமாகவும் கலந்துரையாடல் பட்டரைகள் மூலமாகவும் ஆராய்ச்சிகளைப் பரப்பியது.

4. பிரயோக ஆராய்ச்சிகளின் அனுகூலங்களை பனங்கைத்தொழிலுக்கு வழங்கப்பட்டது.

   அ. பனங்களியிலிருந்து முகஅழகிற்காக பசை செய்வது தொடர்பான செய்முறையையும் உருவாக்கலும் அதனை மேம்படுத்தலும்

   ஆ. பனம் விதையில் இருந்து பெறப்படுகின்ற பூரான் மற்றும் அவித்த பனங்கிழங்கு ஆகியன கொண்டிருதடலுடன் இயற்கையான தன்மைகளையும் நீண்டகாலத்திற்கு பதப்படுத்தல் தொடர்பான பாதுகாப்புமுறையும் வெளிப்படுத்தப்பட்டது.

5. 2017ம் ஆண்டு செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் முடிவுகளை தமிழில் மொழிபெயர்த்து வெளியிடல். ஆராய்ச்சி நிறுவனத்தால் இவ்வளவு காலமும் பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவை இன்றும் வெளிப்படுத்தப்படவில்லை. ஆகவே குறித்த ஆவணங்களை தயார்படுத்தி குறித்த கால இடைவெளியில் அதனை நிறைவு செய்யப்படவேண்டும்.

## பனை ஆராய்ச்சி நிறுவன முன்னேற்றம்

| திட்ட செயற்பாடுகள் | பௌதிக முன்னேற்றம் |
|---|---|
| **ஆராய்ச்சி – 1** | |
| மனிதத் தோலில் ஈரத்தன்மையை பேணும் பசைக்கு பனங்களி சேர்க்கப்படும் செய்முறையை மேம்படுத்தல். | 80 நிறைவுபெற்றது. செய்முறை நிறைவு பெற்றது. தரம் மேம்படுத்தல் வேண்டும். செயன்முறை நடைபெற்று கொண்டிருக்கின்றது. |
| **ஆராய்ச்சி – 2** | |
| பனம் பூரானை பாதுகாத்தல் தொடர்பான தொழில்நுட்பத்தை பரிட்சித்துப்பார்த்தல். | 100 நிறைவு பெற்றது.பாதுகாப்பு தொழில்நுட்பம் அபிவிருத்தி செய்யப்படும். |
| **ஆராய்ச்சி – 3** | |
| பனம் ஊமலிலிருந்து கரியைப் பெறும் கட்டுமான மாதிரியை உருவாக்குதல். | 100 நிறைவு பெற்றது. 3மாதிரிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு சந்தையில் விற்கப்படும் கரியுடன் ஒப்பிட்டு பார்த்ததில் ஒருமாதிரி மட்டும் சிபார்சு செய்யப்பட்டது. |
| **ஆராய்ச்சி – 4** | |
| கழிவுகளுக்கு எதனோல் பாவித்து பிரித்தெடுத்தல் முறை செயற்படுத்தப்பட்டது | 60 நிறைவு பெற்றது சீனி பிரித்தெடுக்கப்பட்டது. புளிக்க வைத்தல் நடைமுறை பின்போடப்பட்டுள்ளது. |
| **ஆராய்ச்சி – 5** | |
| வெவ்வேறான பனைவெல்லம் மற்றும் கள் பதப்படுத்தும இயந்திரங்களின் ஆற்றலை அடயாளப்படுத்தல் | ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. |
| **ஆராய்ச்சி – 6** | |
| கள்ளிலிருந்து வினாகிரி உற்பத்தி செய்தல். | 100 நிறைவுபெற்றது. இரசாயன ரீதியாக அடையாளப்படுத்தல். |
| **ஆராய்ச்சி – 7** | |
| பனைவெல்லத்தின் உள்ளீடுகளை ஸ்பெக்ரோ போட்டோமெற்றிக் முறையில் மதிப்பீடு செய்தல். | 100 நிறைவு பெற்றது. செய்முறை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. |
| **ஆராய்ச்சி – 8** | |
| பனங்களியைப் பயன்படுத்தி வைன் தயாரித்தல். | 100 நிறைவு பெற்றது. 8 அற்கோல் வைன் பெக்ரீன் பாவிக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. |
| **ஆராய்ச்சி – 9** | |
| பனம்பழம் அன்னாசிப்பழம் சேர்ந்த கலவையிலிருந்து பௌதிக இரசாயன மதிப்பீட்டை அபிவிருத்தி செய்து ரொபி தயாரித்தல். | 100 நிறைவுபெற்றது. வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்ற அளவுக்கு ரொபி அபிவிருத்தி செய்யப்படுகின்றது. |
| **ஆராய்ச்சி – 10** | |
| பனங்களி ஜாமை தரமுயர்த்தல் | 100 நிறைவு பெற்றது ஏற்றுமதித் தரத்திற்கு ஜாம் தயார் செய்யப்பட்டுள்ளது. |

## செயற்பாட்டுப் பெறுபேறுகளின் மீளாய்வு

| விபரம் | 2017 | 2016 |
|---|---|---|
| விற்பனைப்புரள்வு | 40,950,627.66 | 31,594,682.86 |
| விற்பனை இலாபம் | 11,198,073.29 | 5,966,770.97 |
| ஏனைய வருமானம் | 5,398,288.21 | 6,236,289.95 |
| இலாபம் ( நட்டம் ) | (131,952,114.68) | (128,597,258.08) |
| தேய்மானம் தவிர்ந்த இலாபம் (நட்டம்) | (46,148,084.24) | (33,550,124.81) |
| அரச பங்களிப்பு – மீண்டுவரும் | 111,500,000.00 | 115,000,000.00 |
| அரச பங்களிப்பு – மூலதனம் | 36,000,000.00 | 36,000,000.00 |
| உத்தியோகத்தர் தொகை | 214 | 214 |

| நிதியியல் மீளாய்வு | 2017 | 2016 |
|---|---|---|
| வருடத்திற்கான ஆரம்ப மிகுதி | 4,948,373.26 | 7,075,211.38 |
| **பணக்கொடுப்பனவற்ற அசைவு** | | |
| தேய்மானம் | 57,166,961.78 | 59,258,297.47 |
| கடன்பட்டோர்களின்அதிகரிப்பு/குறைவு | 28,637,068.66 | 35,788,835.82 |
| கடன்பட்டோர்களின்அதிகரிப்பு/குறைவு | 1,449,418.28 | (9,622,580.53) |
| கடனாளர்களின் அதிகரிப்பு/குறைவு | (6,496,094.94) | 146,156.25 |
| கையிருப்பின் அதிகரிப்பு/குறைவு | (5,713,351.89) | (1,190,639.68) |
| முன்னைய வருட சீராக்கல் | 4,998,318.87 | - |
| **மொத்த பணக்கொடுப்பனவற்ற அசைவு** | 80,042,320.76 | 84,380,069.33 |
| | 84,990,694.02 | 91,455,280.71 |
| **உட்பாய்ச்சல்** | | |
| விற்பனைப் புரள்வு | 40,950,627.66 | 31,594,682.86 |
| ஏனைய வருமானம் | 5,398,288.21 | 6,236,289.95 |
| அமைச்சு | 83,026,000.00 | 19,369,000.00 |
| என்.ஜி.ஓ | - | 2,754,041.51 |
| | 129,374,915.87 | 59,954,014.32 |
| திறைசேரி மானியம் | | |
| – மீண்டுவரும் | 111,500,000.00 | 115,000,000.00 |
| -மூலதனம் | 36,000,000.00 | 36,000,000.00 |
| **மொத்த மானியம்** | 147,500,000.00 | 151,000,000.00 |
| | 361,865,609.89 | 302,409,295.03 |
| **வெளிப்பாய்ச்சல்** | | |
| மீண்டுவரும் செலவினம் | 158,748,429.79 | 150,853,474.18 |
| மூலதனச் செலவினம். | | |
| நிலையான சொத்துக்கள் | 70,395,643.22 | 16,032,690.87 |
| ஆரய்ச்சி அபிவிருத்தி | 59,605,597.57 | 65,005,276.02 |
| பயிற்சித் திட்டங்கள் | 51,386,170.05 | 49,922,030.58 |
| பனை நடுகை/ அபிவிருத்தி செலவினங்கள் | 20,060,833.15 | 15,647,450.11 |
| **மொத்த வெளிப்பாய்ச்சல்** | 360,196,673.78 | 297,460,921.76 |
| **வருடத்திற்கான இறுதி மீதி** | 1,653,936.11 | 4,948,373.27 |

## ஆபத்து முகாமைத்துவம்

- பனை அபிவிருத்தியுடன் தொடர்பான ஒரே அரச நிறுவனம் இதுவாகும். பனை ஒரு பருவகால உற்பத்தியாதலின், வளங்களை முறையாக முகாமைத்துவம் செய்வது சபையின் நிலையான நடவடிக்கைகளுக்கு அவசியமாகும்.
- பனை ஒரு வரண்ட நிலப்பயிராதலின், பனை அபிவிருத்தித் துறையை மேம்படுத்திக்கொள்ளும் நோக்குடன் இதன் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்வதற்கும், தற்போதுள்ள பனை மரங்களைப் பேணிக்கொள்ளவும் முறைசார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளன.
- பனையில் தங்கி வாழும் பெருமளவு மக்கள், சுனாமி அனர்த்தம் நிகழ்ந்த பிரதேசங்களில் வாழ்பவர்கள் அவர்களுக்குரிய பரிகார நடவடிக்கையாவும், அவர்களது சமூக, பொருளாதார நிலைகளை மேம்படுத்தும் நோக்குடனும் சபை அவர்களின் உற்பத்திப் பொருட்களை போட்டி விலையில் சந்தைப்படுத்த வேண்டியுள்ளது.
    - கடந்த மூன்று வருடங்களாக ஏற்பட்ட பாதகமான பருவகால மாற்றத்தால் பனைசார்ந்த உற்பத்திப் பொருட்களின் விளைவு பாதகமாகக் காணப்பட்டது.
    - மதுவிற்காண கேள்வு பனை வெல்ல உற்பத்தியை பாதிப்படைய வைத்துள்ளது.
- பனைசார்ந்த நுகரும் உற்பத்திப் பொருட்கள் அழிவடையும் இடரிலிருந்து தடுப்பதற்கு விசேடமான உணவு பாதுகாப்பு முறைகள் இணைக்கப்படவேண்டி இருக்கின்றது.
- வடக்கு – கிழக்குப்பகுதிகளில் பல்வேறு பாதக தன்மைகளால் பனை அழிக்கப'பட்டது எனினும் இதை தடுக்க 2000ம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டது.
- யதார்த்தமான வரவு செலவுத்திட்டத்தை வரைவதன் மூலம் வடிவமைக்கப்படும் ஒழுங்கமைப்பினால் உள்ளகக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## உத்திகள்

- பனையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தித் துறையின் அபிவிருத்திக்கும் அதனுடன் தொடர்பான மக்களின் வாழ்வு மேம்பாட்டுக்கும் சிறந்த முயற்சிகளை மேற்கொள்ளும் முதன்மை நிறுவனமாக பனை அபிவிருத்திச் சபை விளங்குதல்.
- மேலும் பனம் பயிர்ச்செய்கையின் முன்னேற்றகரமான வளர்ச்சி, ஏனைய ஊடுபயிர்களின் வளர்ச்சி, பனை மரத்தோட்டங்களில் கால்நடை வளர்ப்பு நோய்களிலிருந்தும், தொல்லை தரும் சிறு பிராணிகளிடமிருந்து பயிர்களைக் காக்கும் செயற்பாடுகள் என்பவற்றுக்காக விஞ்ஞான ரீதியான ஆய்வுகளைத் தொடர்ந்து நடத்துதல்.
- பனம் விதை நடும் வருடாந்த செயற்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தல்
- பனை வளரும் பிரதேசங்களில் இளம் பனையோலை, பனந்தண்டு, ஈக்கிள் போன்றவற்றை மூலப்பொருட்களாகக் கொண்டு உருவாக்கப்படும் கைவினைப்பொருள் உற்பத்தி தொடர்பாக பனை அபிவிருத்திச் சபை, தொழிற்பயிற்சி அமைச்சுடன் இணைந்து இப்பிரதேச இளம் பெண்களுக்கு பயிற்சி வழங்கும் திட்டமொன்றைச் செயற்படுத்துதல்.
- பயிற்றுவிப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் பணி செய்வதற்குத் தேவையான மூலதனத்தின் ஒரு பகுதியை வழங்குவதோடு, பயிற்சி பெறுவோர் ஊடாக தரமான உற்பத்திகளை சபைக்குப் பெற்றுக்கொள்வதையும் உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- இயற்கை அனர்த்தங்களாலும், மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அழிவுகளாலும் பாதிக்கப்பட்ட பனம் பயிர்ச்செய்கையை மீளப் புனரமைத்தல்.
- பனையை அடிப்படையாகக் கொண்ட விதை நாட்டல், நார் உற்பத்தி, கைப்பணிப் பொருட் பயிற்சி என்பவற்றை நடைமுறைப்படுத்தும் பங்காளராக பனை அபிவிருத்திச் சபை விளங்குவதோடு, உதவி வழங்கும் நிறுவனங்களை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.
- சர்வதேசச் சந்தையின் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்காக தொடர்ச்சியான தேடல்களை மேற்கொள்ளல்.

## மனித மூலதனம்

உத்தியோகத்தர்களின் உற்பத்திச் செயற்திறனை மேம்படுத்தும் வகையில் சபையை மீளமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களும் உத்தியோகத்தர்களுமே இதன் சொத்து என ஏற்றுக்கொள்கின்ற அதேவேளை, அவர்களின் பங்களிப்பை மேம்படுத்தும் வகையிலும், நிறுவன நலனுக்காகவும் சிறந்த பயிற்சித்திட்டங்கள், புலமைப்பரிசில்கள், பயிற்சிப் பட்டறைகள் என்பவை வடிவமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றன.

## சூழல் பற்றிய அறிக்கையிடல்

- பனை சிறந்த ஒரு உணவுப் பொருளாக அமைவதோடு ஒரு நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் முதலாவதும், முக்கியமானதுமான ஒரு பயிராகவும், மருத்துவ ரீதியில் பயன்தரும் பயிராகவும் அமைவதால் பனை அபிவிருத்தியை புத்துயிரூட்டச் செய்வதற்கு விசேட தொழில்நுட்ப முறைகள் செயற்படுத்தப்படுகின்றன.
- பனை மரம் மனிததேவைகட்காவும் போரினாலும் அழிக்கப்பட்டு வருகின்றது. இதனால் "மகிந்த சிந்தனை"இ "வடக்கின் வசந்தம்" திட்டத்தின் கீழ் வடக்கிலும் "கிழக்கின் உதயம்" திட்டத்தின் கீழ் கிழக்கிலும் மீழ்நடுகை செய்யப்பட்டு வருகின்றது.
- பனை உணவுகள் இயற்கையானவை இதனாலும் இதன் உண்ணக்கூடியஇ உண்ணமுடியாத உற்பத்திப் பொருட்களுக்கு அதிகரித்த கேள்வி நிலவுவதாலும் சபை பனை மரங்களின் எண்ணிக்கையை 11 மில்லியனில் இருந்து 20 மில்லியன் வரை அதிகரிக்கவுள்ளது
- அத்துடன் பனம் கைப்பணிப்பொருட்கள் இயற்கைக்கு இசைவானவை. இவ் வருடத்தில் 3 அரசசார்பற்ற நிறுவனங்களால் பங்களிப்பு செய்யப்பட்டது. இது மட்டுமில்லாது கிராம மட்டங்களில், மிகவும் வறுமையில் வாழும் மக்களினதும், குறைந்த வருமானம் பெறும் மக்களினதும் சமூக, பொருளாதார வாழ்வு நிலையை மேம்படுத்துவதற்கு ஏதுவாக அமைகின்றது.

## (இ) நிறுவன ஆளுகை

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், பொதுமுயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சு, என்பவற்றின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறைகளையும், பொறுப்பான அமைச்சு வழங்கும் வரையறைகளையும் நாம் பின்பற்றுகின்றோம்.

### பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

சபைக் கூட்டங்கள் முக்கியமான கொள்கைகள், நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ விடயங்களை ஆராயவும், தீர்மானிக்கவும் ஒவ்வொரு மாதமும் கூடுகின்றன. 2017ஆம் ஆண்டு 10 கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

### கணக்காய்வாளர் முகாமைத்துவக்குழு

இக்குழுவில் கணக்காய்வாளர் முகாமைத்துவக்குழுப் பணிப்பாளரின் தலைமையின் கீழ் சுயேச்சையான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக பிரதி நிதிப்படுத்தும் திறைசேரி நாயகம் உட்பட இன்னும் வேறுநிறைவேற்று அதிகாரமற்ற இரு பணிப்பாளர்கள் இடம் பெறுவர் அழைப்பாணையின் பேரில் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி கூட்டங்களில் கலந்து கொள்வார்கள் கணக்காய்வாளர் முகாமைத்துவக் குழு ஏனைய நடவடிக்கைகள் உட்பட உள்ளகக்கட்டுப்பாட்டு முறை இடர்முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல் சட்டவிதிகளின் தேவைக்கு இணக்கமாக செயற்படுதல் ஆகிய அம்சங்களை மீளாய்வு செய்கிறது.

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

கணக்காய்வு முகாமைத்துவக் குழு பின்வரும் வழிகளில் சபை பணிப்பாளர்கட்குதவுகின்றது.

1. சபையின் இடைக்கால மற்றும் வருடாந்த அறிக்கைகள் இலங்கை கணக்கியல் தரநிலைகளை ஒத்தனவா என ஒப்பிட்டுப் பார்க்கின்றது.
2. முகாமைத்துவ உள்ளகக் கட்டுப்பாடு பற்றி அறிக்கையிடல்.
3. உரிய உள்ளக, வெளியார், நிதி சம்பந்தமானன மற்றும் கோப் சிபார்சை உரியமுறையில் அமுல்படுத்தப்பட்டதை உறுதிப்படுத்தல்.
4. சட்டத்தையும் கொள்கைகளையும் அமுல்படுத்தியதை உறுதிப்படுத்தல்.
5. வியாபார ஆபத்து முகாமைத்துவம் பற்றி அறிக்கையிடல்.
6. கணக்காய்வாளர் திணைக்கள கடமையை உறுதிப்படுத்தல்.
7. உள்ளகக் கணக்காய்வார் கடமையை உறுதிப்படுத்தல்.

2017 ஆம் ஆண்டு 04 கூட்டம் நடைபெற்றது.

### உள்ளகக் கட்டுப்பாடு

விநியோக நடவடிக்கைகளைப் பொறுத்தவரை அவசியமான நடைமுறைகளை உறுதிப்படுத்துவதற்காக விலை மனுச்சபை, விலை நிர்ணயக் குழு, கொள்வனவுக் குழு என்பவற்றை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. உள்ளகக் கணக்காய்வு நிதிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அனைத்துச் செயற்பாடுகளிலும் மிகுந்த கண்காணிப்புடன் செயற்படுகின்றது.

### முகாமைத்துவம்

பொது முகாமையாளரின் கீழ், ஆறு பிரிவுத் தலைவர்கள் செயற்படுகின்றனர். பிரிவுத் தலைவர்கள் மாவட்ட இணைப்பாளர்களுடன் இணைந்து பணியாற்றுகின்றனர். ஒவ்வொரு பிரிவுத் தலைவரும் பிரதான நிறைவேற்று அதிகாரியான பொதுமுகாமையாளருக்கு தமது அறிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றனர்.

### பிறவிடயங்கள்

- அனுபவமும் ஆற்றலுமுள்ள தொழிலாளர்களின் சடுதியான குறைவு, இதற்கான சாதிப்பாகுபாட்டுத்தாக்கங்கள், உயிர் ஆபத்துக்குரிய இடர்த்தன்மை, பதநீர் எடுக்கும் போது மேற்கொள்ளவேண்டிய கஷ்டமான நடைமுறை ஆகியன பனை வள வழங்களை கட்டுப்படுத்துதல்.
- தேவைக்கு அதிகமான பனைமரங்களைஇ பாதுகாப்புஇ மரப்பலகை உற்பத்தி செய்தல், ஆகிய காரணங்களுக்காக வெட்டுவதனால் பனைமரங்களின் தொகை தொடர்ந்து குறைவடைந்து செல்லும் போக்கினைக் கொண்டுள்ளது.
- அரசாங்கத்தினதும் தனிப்பட்டவர்களினதும் இத்துறைக்கான மூலதனம் பாய்ச்சல் போதியளவு இல்லாமை.
- பனம் பொருட்களுக்கான விசேட ஆய்வு கூடவசதிகள் இல்லாமையும், ஆய்வுகளுக்கான நிதி ஒதுக்கீடு இல்லாமையும், பனம் பொருள் உற்பத்தித்துறையின் யதார்த்தமான அபிவிருத்திக்கு விஞ்ஞானத்துறை வளர்ச்சியின் பங்களிப்பு இல்லாதிருத்தல்.
- பனம் பொருள் உற்பத்தியின் போது பருவகால ஆரம்ப உற்பத்திப்பொருட்கள் அளவுக்கு மேலதிகமாக இருத்தல் அதனைத் தொடர்ந்து இவை அழிவடையும் தன்மையினால் வருடமுழுவதும் பனை உற்பத்தியிப் பொருட்களை பாதுகாக்ககூடிய களஞ்சியவசதி இல்லாத குறையை நிவர்த்தி செய்யவேண்டிய நிலைமை.
- போதிய அளவு அக்கறையும் முயற்சியும் உபாயங்களும் மேற்கொள்ளப்படாத காரணங்களினால் உள்நாட்டிலும், சர்வதேசமட்டத்திலும் நிலவும் செழிப்பற்ற சந்தை வலைப்பின்னலை அபிவிருத்தி செய்ய இயலாமை.
- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பனம் பொருட்கள் உள்நாட்டு சந்தைகளில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குறைந்த விலையுள்ள பனம் பொருட்களின் உட்பிரவேசத்தினால் மந்த நிலையில் இருத்தல்.
- பனம் பொருட்கள் உற்பத்தி துறையைக் கட்டுப்படுத்துவதற்கும் நிருவகிப்பதற்கும் புறம்பான சட்டவிதிகள் இல்லாமை.
- விஞ்ஞானிகளின் அக்கறை இன்மையும், பனம் பொருட்களுக்கான விசேட ஆய்வு கூடவசதிகள் இல்லாமையும், ஆய்வுகளுக்கான நிதி ஒதுக்கீடு இல்லாமையும், பனம் பொருள் உற்பத்தித்துறையின் யதார்த்தமான அபிவிருத்திக்கு விஞ்ஞானத்துறை வளர்ச்சியின் பங்களிப்பு இல்லாதிருத்தல்.
- பனை உற்பத்திப் பொருட்கள் போட்டி விலைகளில் சில்லறை வியாபாரிகளினால் விற்கப்படுவதால் கடுமையான விலை நிர்ணயக்கொள்கை ஒன்றைப் பின்பற்ற வேண்டியுள்ளது. அதேவேளை ஏற்றுக்கொள்ளத்தக்க தரநியமத்தையும் பேண வேண்டி உள்ளது.
- கைப்பணிப்பொருட்களிற்கு ஏற்றுக் கொள்ளத்தக்க தரநியமத்தையும் பேண முடியாமல் உள்ளது. எனவே புதியமுறையை அமுல்படுத்த ஆலோசிக்கின்றது
- வெளிப்புற சக்திகளின் தலையீடு காரணமாக மனித வளத்தின் உச்சப்பயன்பாட்டைப் பெறுதல் இயலாததாக உள்ளது. சபைக்குரிய நிதி நிலை வரம்பு காரணமாக சில செயற்பாடுகள் எல்லைப்படுத்தப்படுவதால் சில பதவிநிலை உத்தியோகத்தர்களின் சேவை குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்படுகின்றது.
- ஓய்விற்குரிய வயதை அடைந்த உத்தியோகத்தர்களின் சேவை நீடிப்பிற்கான அனுமதி விதி விலக்கான தருணங்களில் மட்டும் வழங்கப்பட்டு, மீள வடிவமைக்கும் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

## ஈ. பணிப்பாளரின் அறிக்கை

### பொதுவான

பனையுடன் தொடர்பான உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதோடு சமூக மேம்பாட்டையும் மேற்கொள்ளும் ஒரே அரச நிறுவனம் இதுவாகும்.

பிரதான காரியாலயம், யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றது. பிராந்தியக் காரியாலயங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இயங்குகின்றன.

கொழும்பில் இயங்கும் நகரக் காரியாலயம், பிராந்தியக் காரியாலயங்கள், அமைச்சு, திறைசேரி மற்றும் ஏனைய முக்கிய நிறுவனங்கள் என்பனவற்றை இணைக்கும் காரியாலயமாக செயற்படுகின்றது.

### எதிர்காலத் திட்டங்கள்

சபையினால் செயற்படுத்தப்பட்ட தொழிற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை தொழிற்பயிற்சிக்கு உதவும் அரசசார்பற்ற நிறுவனங்கள் அரச நிறுவனங்களின் உதவியோடு முன்னெடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

---

